**குச்சவெளி பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 13 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 செப்தெம்பர் 15 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 23 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குச்சவெளி பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடு

சபையினால் நிர்மாணிக்கப்பட்டு மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட சிறுவர் G+ங்காவின் கிரயம் ரூபா 4,504,116 தொகையாக காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,245,000 தொகையாக காட்டப்பட்டுள்ளமையால் நடைமுறையல்லாச் சொத்தின் பெறுமதி ரூபா 1,740,884 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 7,591 முற்பணத்தை கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபையில் கடமை புரிந்த 08 ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய சம்பளங்கள் ரூபா 457,193 மீளாய்வாண்டின் இறுதி வரை கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டுவருகின்றது.

1.3.4 ஆவணச் சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| செலுத்தப்படாத சம்பளங்களும் கூலிகளும் | 299,018 | விபரப் பட்டியல் |
| அரசிறையின் பேரிலான வைப்பு | 156,649 | வைப்புப் பதிவேடு |

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் I விதி 5(12) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மாகாண நிதி ஒழுங்கு விதி இல 237 | ஆறு மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட, ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,033,492 மொத்தப் பெறுமதியான 48 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் பிரிவு 203 | சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 05 வாகனங்களுக்கு வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் செயற்பாடுகள் ரூபா 34,820,840 மீண்டு வரும் செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா 16,197,286 தொகையான செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2015 திசெம்பர் 31இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” |
| வீதவரிகள் | 22,000 | 2,686 | 19,315 |
| வாடகை | 6,720 | 3,195 | 3,525 |
| சேவைகளுக்கான கட்டணம் | 223 | 127 | 96 |
| உரிமங்கள் | 1,875 | 1,302 | 573 |

#### 2.2.2 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக நிலுவையாகவுள்ள இறைச்சிக்கடை குத்தகை ரூபா 2,966,529 தொகையை அறவிடுவதற்கு சபை மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நிலுவையாகக் காணப்படும் ரூபா 1,042,614 மொத்த தொகையான வாகன வாடகை, வங்கி வட்டி மற்றும் மூலதன வட்டி என்பவற்றை அறவீடு செய்ய மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம், பிரதேச சபையின் எல்லைக்குள் செயற்பட்டுவரும் 09 சுற்றுலா விடுதிகளின் ஆண்டு வருமானத்தில் 1 சதவீதத்தை உரிமத் தீர்வையாக அறவிடுதல் தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒரு சுற்றுலா விடுதியின் 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கான மேற்கூறிய தீர்வையை ஆண்டு வருமானத்திற்குப் பதிலாக தேறிய இலாபத்தின் அடிப்படையில் அறவிட்டமையினால் ரூபா 65,429 வருமான இழப்பு சபைக்கு ஏற்பட்டுள்ளது.

(ii) நான்கு சுற்றுலா விடுதிகளிடமிருந்து நான்கு ஆண்டுகளாகவும் மேலும் இரண்டு சுற்றுலா விடுதிகளிடமிருந்து இரண்டு ஆண்டுகளாகவும் உரிமத் தீர்வை அறவிடப்படாது காணப்பட்ட போதிலும் அவ் விடுதிகள் தொடர்பாக இன்றுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட நிலாவெளி மற்றும் குச்சவெளி ஆகிய இடங்களிலுள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் மீது வீதவரிகள் அறவீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆண்டுப்பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவப் பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 05 வாகனங்கள் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுநிர்வாக அமைச்சின் 09/2009 இலக்க 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர்களின் வருகையைப் பதிவு செய்வதற்காக நேரப்பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டில் புல்மோட்டை அகதிமுகாமில் தங்கியிருந்தவர்களுக்காக சபையினால் மீள்குடியேற்ற அமைச்சு சார்பாக மேற்கொண்ட நலன்புரிச் சேவைகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 2,354,448 தொகை குறித்த அமைச்சிடமிருந்து இன்றுவரை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 ஆம் ஆண்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு தேறப்படாத 06 காசோலைகளின் பெறுமதி ரூபா 16,690 உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையில் 02 ஆண்டுகள் தொடக்கம் 27 ஆண்டுகள் வரையான காலமாகக் நானாவித வைப்புக்கள் ரூபா 12,423,015 தொகை தொடர்பாக நிதி ஒழுங்கு விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 32 ஆண்டுகளுக்கு முன்னர் கடமையை விட்டு விலகிய 05 ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிணை வைப்பு ரூபா 8,500 கூட்டுமொத்த தொகையை மீளளிப்பதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபையின் 10 ஊழியர்களின் ரூபா 273,545 தொகையான நிலுவைக் கடனை அவர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபையின் முன்னாள் செயலாளரால் 2015 ஆம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 1,493,294 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதிவரை சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த பிக்கப் வாகனம் 2015 ஆம் ஆண்டு விபத்துக்குள்ளாகி முழுமையாக சேதமடைந்திருந்த போதிலும் உரிய காப்புறுதிக் கம்பனியிடமிருந்து நட்டஈட்டை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) குழாய் நீர் விநியோகத் திட்டம் தொடர்பாக 08 சனசமூக நிலையங்களுக்கு 2013 ஆம் ஆண்டில் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 1,000,000 தொகையை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் சபையின் ஊழியர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,744,138 மொத்தத் தொகையான முற்பணங்களை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2015 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது சபையில் காணப்படும் 08 நூலகங்களில் 599 புத்தகங்கள் குறைவாகக் காணப்பட்டிருந்த போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அஅ) அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் EST-8/UNIFO/06/0302/6 ஆம் இலக்க 2013 ஏப்ரல்22 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம், ஊழியர்களுக்கு சீருடைத்துணிக்கும் பதிலாக 2013 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து ஆண்டு தோறும் ரூபா 4,000 பணமாக வழங்கப்பட வேண்டும். எனினும் இதற்கு முரணாக மீளாய்வாண்டில் ரூபா 150,150 பெறுமதியான சீருடைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு சீருடைகள் வழங்கப்பட்ட போதிலும் இச்சீருடைகள் அணிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு தரம் வாய்ந்ததாக இல்லாததால் அச்சீருடைகள் பயன்படுத்தாமல் வைக்கப்பட்டுள்ளது என அவ் ஊழியர்களால் கணக்காய்விற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் இச்சீருடைகளுக்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவினமாக மாறியுள்ளது.

3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

---

சபையின் தவிசாளர் 2015 பெப்ரவரி 05 மார்ச் 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வ ரீதியாக சபையின் உப அலுவலகங்களுக்கும் உள்@ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கும் சென்றிருந்தமையானது அவர் பயன்படுத்திய அலுவலக வாகனத்தின் ஓட்டப்பதிவுப் புத்தகத்தின்

குறிப்புக்கள் உறுதிப்படுத்திய போதிலும் அத்திகதிகளில் அவர் கொழும்புக்கு உத்தியோகபூர்வ ரீதியாக பயணம் செய்ததாகக் கூறி இணைந்த படிகளும் போக்குவரத்துப் படிகளுமாக ரூபா 43,100 தொகையினைப் பெற்றிருந்தார்.

## 4. மனிதவள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | பற்றாக்குறை | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | 01 | - | -- |
| உதவியாளர்கள் | 27 | 19 | 08 | -- |
| சிற்றூழியர்கள் | 44 | 72 | - | 28 |
| | 72 | 92 | 08 | 28 |

முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 08 பதவிகள் கடந்த 05 வருடகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படவில்லை. |
| | (ii) சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படவில்லை. |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |
| | (ii) களஞ்சியப் பேரேடு முறையாகப் பேணப்படவில்லை. |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |